

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் மற்றும் இலால்குடி அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (22.09.2024) திடீர் ஆய்வு மேற்கொண்டு மருத்துவமனை உட்கட்டமைப்பு வசதிகள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் வருகை பதிவேடு. மருந்து இருப்பு பதிவேடுகள் ஆகியவற்றை பார்வையிட்டு நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தும், சிகிச்சை பெற்று வருபவர்களிடம் கலந்துரையாடினார்.



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூலப்பள்ளிப்பட்டி, ஈஸ்வரமூர்த்திபாளையம், திம்மநாயக்கன்பட்டி, மத்துருட்டு, மங்களபுரம், ஆயில்பட்டி மற்றும் கார்கூடல்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.5.26 கோடி 8 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், நாமகிரிப்பேட்டை கழகச் செயலாளருமான கே.பி.இராமசுவாமி மற்றும் ஊராட்சி தலைவர்கள், கழக தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### எனது அமெரிக்கப் பயணம் குறித்து

# பா.ஜ.க.வினர் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!


புதுடெல்லி, செப். 24-

**தனது அமெரிக்க பயணம் குறித்து பா.ஜ.க.வினர் பொய்ப் பிரச்சாரங்களை பரப்பி வருகின்றனர் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் குற்றம் சாட்டியுள்ளார்.**

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி அண்மையில் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அங்கு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், "இந்தியாவில் வசிக்கும் சீக்கியர்கள் தங்கள் மத அடையாளமான தலைப்பாகை அணிவதற்கே போராட வேண்டி உள்ளதாகவும்,

இந்த பிரச்சினை அனைத்து மதத்தினருக்கும் உள்ளது என்றும் கூறினார்.

இவரது இந்தப் பேச்சுக்கு பா.ஜ.க.வினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.



சீக்கியர்கள் குறித்த கருத்தை ராகுல் திரும்பப் பெற வேண்டும் என்றும் பா.ஜ.க.வினர் கோரி வருகின்றனர்.

இதுகுறித்து சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ள ராகுல் காந்தி, அமெரிக்காவில் தான் பேசிய கருத்துக்கள் குறித்து பா.ஜ.க.வினர் பொய்களை பரப்பி வருவதாகத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் தான் பேசியதில் தவறு இருக்கிறதா என இந்தியா மற்றும் அமெரிக்காவில் வசிக்கும் சீக்கிய சகோதர, சகோதரிகளிடம் கேட்பதாகவும், ஒவ்வொரு சீக்கியரும் ஒவ்வொரு இந்தியரும் தங்கள் மத நடைமுறைகளை அச்சமின்றி சுதந்திரமாக பின்பற்றக் கூடிய நாடாக இந்தியா இருக்க வேண்டும் என தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தான் உண்மையைப் பேசிவிட்டதால் பா.ஜ.க.வினரால் அதனை பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்றும் தன்னை மவுனமாக்க அவர்கள் விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ள ராகுல் காந்தி, இவ்விவகாரம் குறித்து தொடர்ந்து குரல் கொடுப்பேன் என்றும் பதிவிட்டுள்ளார்.

### இதுதான் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனை:

# ஒட்டுமொத்தமான உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டுக்கு மூன்றாவது இடம்!

## பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு அறிக்கை!

சென்னை, செப்.24-

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு 3ஆவது இடத்தை பிடித்துள்ளது. அதேபோன்று. தனிநபர் வருமானத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி என்பது ஜி.டி.பி. எனப்படும் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்படுகிறது. ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலகில் முதலிடத்தில் அமெரிக்கா உள்ளது. இந்த பட்டியலில் இந்தியா 5ஆவது இடத்தில் இருக்கிறது.

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதத்தை அதிகரிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது.

மாநிலங்களின் உற்பத்தி அடிப்படையில் தான் இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

### மாநில வாரி வளர்ச்சி

ஒவ்வொரு 10 ஆண்டுகளை ஒப்பிட்டு இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி எப்படி, உள்ளது என்பது குறித்து பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக்குழு ஒன்றிய அரசுக்கு அறிக்கை அளித்து வருகிறது. அதன்படி, கடந்த 1961ஆம் ஆண்டு முதல் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிடப்பட்டு ஒன்றிய அரசுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2023-2024ஆம் நிதியாண்டின் பொருளாதாரம் மற்றும் தனிநபர் வருமானத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மாநில வாரியாக எப்படி உள்ளது? என்ற விவரங்களை பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக்குழு உறுப்பினர்களான சஞ்சீவ் சன்யால் (பொருளாதார மேதை), ஆகன்க்ஷா அரோரா (நிதி ஆயோக்துணை இயக்குநர்) ஆகியோர் அடங்கிய குழு ஆய்வு மேற்கொண்டு இந்த மாதம் (செப்டம்பர்) ஒன்றிய அரசிடம் அளித்துள்ளது.

2023-2024-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீத பங்களிப்பை தென் மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, கேரளா ஆகிய மாநிலங்கள் அளித்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

### தேசிய சராசரி

தனிநபர் வருமானத்தை பொறுத்தமட்டில் தேசியசராசரியை ஒப்பிடும்போது தென் மாநிலங்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், 'தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் 3ஆவது இடத்தில் உள்ளது.

மராட்டிய மாநிலம் 13.3 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது. ஆந்திரா 9.7 சதவீதத்துடன் 2வது இடத்திலும், தமிழகம் 8.9 சதவீதத்துடன் 3வது இடத்திலும் இருக்கிறது. 1991 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் தென்மாநிலங்களின் பங்களிப்பு பெரிய அளவில் இல்லை. கவலை அளிப்பதாக உள்ளது

1991-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைக்கு பிறகு ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தென் மாநிலங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

ஒட்டுமொத்த மாநிலங்களும் சராசரி வளர்ச்சியை எட்டிய போதிலும், மேற்கு வங்கம் உள்ளிட்ட சில மாநிலங்கள் மட்டும் பின்னடைவை சந்தித்து உள்ளது. அதாவது, 1961ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தில் 10.5 சதவீதமாக இருந்த ஒட்டு மொத்த உற்பத்தி தற்போது 5.6 சதவீதமாக குறைந்துள்ளது. ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது தென்மாநிலங்கள், மராட்டியம், குஜராத் உள்ளிட்ட மேற்கு மாநிலங்கள் மற்ற மாநிலங்களைவிட சிறப்பாக செயல்படுகின்றன. வட மாநிலங்களில் சில பகுதிகளில் மட்டும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக பொருளாதார பேராசிரியர் ஒருவர் கூறும்போது, 'இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் வேகமாக வளர்ந்து வருகிறது. பீகார், உத்தரப்பிரதேசம், ஜார்கண்ட், மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் தனிநபர் வருமானம் மிக குறைவாக இருப்பதால் இம்மாநிலங்களை சேர்ந்தவர்கள் தனிநபர் வருமானம் அதிகம் உள்ள தென் மாநிலங்களை நோக்கி வருகிறார்கள்' என்றார்.



திமுக முப்பெரும் விழா, திமுக 75 ஆம் ஆண்டு பவளவிழாவை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் பகுதி2, வார்டு எண்:54, நீலிக்கோணாம்பாளையம் பெரிய விநாயகர் கோவில் திடலில் நடைபெற்ற மாபெரும் கண்சிகிச்சை முகாமை கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் துவக்கி வைத்தார். திமுக பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் சசிகுமார், சிங்காநல்லூர் பகுதி2 செயலாளர் சிங்கை மு.சிவா,54 வது வட்டக் கழகச் செயலாளர் கே.ஆனந்தகுமார் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள், இக் கண்சிகிச்சை முகாமில் கலந்து கொண்டு, கண்சிகிச்சை பெற்று பயன் பெற்றனர். செம்மொழி முருகானந்தம், அன்பு, தென்னவர் செல்வராஜ், ராஜேந்திரன், கஸ்தூரி அருண், வசந்தி, ராமகிருஷ்ணன், சம்பத், பாலமுருகன், ப .நா.கந்தசாமி, ஆட்டோ சண்முகம், ராஜேஷ்குமார், ராஜேஸ்வரி, வெங்கடேஷ், ஜம்பு என்கிற திருநாவுக்கரசு, தங்கவேல், சிவகுமார், பிரதீப் மற்றும் ரமேஷ் மணி, அரவிந்தன், மனோஜ், ரங்கராஜ், தம்பு என்கிற சுந்தர்ராஜ், பழனிச்சாமி,தன்ராஜ், முத்துவேல், ரமேஷ், மணி கண்டன், சிவகுமார், தயாநிதி, குகன்,அபி, குகன், சி.என்.சி.சிவகுமார், திருவேங்கடசாமி, கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் திரளான, பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பேராயர் எஸ்றா சற்குணம் உடல் நலக்குறைவால் காலமானார்!

சென்னை: செப். 24-

இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவரும், இவாஞ்சலிகல் சர்ச் ஆஃப் இந்தியா (ECI) பேராயருமான எஸ்றா சற்குணம் உடல்நலக் குறைவால் சென்னையில் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 86.

இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவரும், இவாஞ்சலிகல் சர்ச் ஆஃப் இந்தியா (ECI) பேராயருமான எஸ்றா சற்குணம் அவர்கள், கடந்த சில நாட்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், இ.சி.ஐ திருச்சபை பேராயர் எஸ்றா சற்குணம் நேற்று முன்தினம் உடல் நலக் குறைவால் சென்னையில் காலமானார்.

பேராயர் எஸ்றா சற்குணம் தனது 86 வது பிறந்த நாளை, கடந்த ஜூலை மாதம் 19 ஆம் தேதி கொண்டாடினார். அப்போது தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட தலைவர்கள் நேரில் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 86 வயதில் நேற்று முன்தினம் மறைந்தார் எஸ்றா சற்குணம்.

மறைந்த பேராயர் எஸ்றா சற்குணத்தின் உடல் சென்னை கீழ்ப்பாக்கம் இறையியல் கல்லூரி வளாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது இறுதிச் சடங்கானது நேற்று நடைபெற்றது.

பேராயர் எஸ்றா சற்குணம், மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர், முதல்வர் மு.க.ஸ்டாலின், விசிக தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., ஆகிய தலைவர்களுக்கு மிக நெருக்கமானவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை! 2026 சட்டமன்றத் தேர்தலிலும் மீண்டும்

# கழக ஆட்சி அமைந்திட தீவிரப் பணியாற்றுவோம்!

## தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சை, செப். 24-

தி.மு.க மாநில மகளிரணி,மகளிர் தொண்டரணி,பிரச்சாரக்குழு,சமூக வலைத்தளக்குழு,ஆலோசனைக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்

கழகத்துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் 20.9.2024 அன்று தஞ்சை ஜெயராம் ஹாலில் நடைபெற்றது.

இதில் மகளிரணித்தலைவர் விஜயா தாயன்பன், செயலாளர் ஹெலென் டேவிட்சன்,தொண்டரணிச்செயலாளர் நாமக்கல் ராணி, இணைச்செயலாளர்கள் குமரி விஜயகுமார் ,தமிழரசி ரவிக்குமார் மற்றும் மகளிரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

2026 பொதுத்தேர்தலில் மகளிரணியின் செயல்பாடுகள் எப்படி அமையவேண்டும் என்பது குறித்து ஆலோசனைகளை வழங்கி கனிமொழி எம்.பி. சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அமெரிக்க நாட்டிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பயணம் மேற்கொண்டு பல தொழில் அதிபர்களையும். தொழில் முதலீட்டாளர்களையும் சந்தித்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து பல ஆயிரம் கோடி முதலீட்டை தமிழகத்திற்கு பெற்று திரும்பியிருக்கும் நம் தமிழக முதல்வரின் பயணம் வெற்றிப் பயணம் மட்டுமல்ல தமிழர்கள் அத்தனை பேரையும் பெருமையடையச் செய்யும் நிகழ்வாகவும் அமைந்திருக்கிறது.

அமெரிக்க வாழ் தமிழர்கள் நம் முதல்வருக்கு அளித்த மாபெரும் வரவேற்பு நம்மை நெகிழ்ச்சி செய்கிறது. பல ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில் இந்த அமெரிக்க வெற்றிப் பயணத்தை மேற்கொண்டு திரும்பியிருக்கும். நம் திராவிட மாடல் அரசின் முதல்வருக்கு மகளிரணி தன் உளமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவராக நாம் முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் நாம் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும், நம் கழகம் வெற்றி வாகை சூடி வருகிறது. அதற்குக் காரணம் நம் தலைவர் வகுத்த அரசியல் வியூகமும் உழைப்பும் தான் அடுத்து நாம் சந்திக்க விருப்பது 2026 ல் சட்டமன்றத் தேர்தல் எப்படி நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 என சூளுரைத்து வென்றோமோ, அதே போல் எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் பெரும்பான்மை இடங்களை கைப்பற்றி மீண்டும் கழக ஆட்சி அமைத்திடல் வேண்டும்.

1967 பொதுத்தேர்தலை சந்தித்த பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், 1964 லிலேயே திட்டமிடத் தொடங்கி, வெற்றிக் கூட்டணியை அமைத்து 1967 ல் மாபெரும் வெற்றியைப் பெற்றார்கள். அவர்கள் அடியொற்றி நடைபோடும் நம் தளபதி அவர்கள், 2026 பொதுத் தேர்தலுக்காக 2024 லிலேயே தேர்தல் பணிகளை தொடங்கியிருக்கிறார். கழக முன்னோடிகளைக் கொண்டு ஒரு குழு அமைத்து, அதன் மூலம் மாவட்ட நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் அத்தனை பேரின் கருத்துகளையும் ஆய்வு செய்து அதன் அடிப்படையில் 2026 சட்டமன்ற தேர்தல்கான திட்டமிடுதலை தொடங்கியிருக்கிறார். அவர் அனைத்திலும் வெற்றி பெற மகளிரணியின் சார்பில் வாழ்த்துக்கள்

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். குறிப்பாக தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட்டு வென்ற நம் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அத்தனை வேட்பாளர்களையும் டெபாசிட் இழக்கச் செய்தார் என்பது வரலாறு காணாத ஓர் நிகழ்வு.

தன்னுடைய ஓய்வரியா உழைப்பின் மூலம் தூத்துக்குடி மக்களின் மனதில் நிலையான இடம் பெற்றிருக்கும் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களுக்கு மகளிரணி தன் உளமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறது.

திமுக கழகத்தின் முப்பெரும் விழா. கழகத்தின் பவள விழா சமீபத்தில் நம் முதல்வர் கழகத் தலைவர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது தமிழகத்தில் எந்தக் கட்சிக்கும் இல்லாத தனிச்சிறப்பு இது 1949 ஆம் ஆண்டு சென்னை ராபின்சன் பூங்காவில் தொடங்கப்பட்ட நம் இயக்கம் 75 ஆண்டுகளைக் கடந்து வெற்றி நடை போடுகிறது அன்று முதல் இன்று வரை கழகத்தின் வளர்ச்சியில் மகளிர் பங்கு மிக முக்கியமானது எதிர்வரும் பொதுத்தேர்தல் 2026 இல் நடைபெற உள்ளது 2021 இல் முதல்வராக பொறுப்பேற்ற நம் முதல்வரின் சாதனைகள் வரலாற்றுச் சிறப்புமிக்கது அதை மக்களிடம் குறிப்பாக நம் தாய்மார்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பு மகளிர் அணிக்கு உள்ளது அதை மனதில் கொண்டு நம் பணிகளை உடனே தொடங்கிடல் வேண்டும் 2026 இல் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் நம் தளபதியை தமிழக முதல்வர் ஆக்கிட, நம் மகளிரணி தீவிரமாக தேர்தல் களப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உழைத்திடுவோம் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு ஒன்றியம் தி. மு. க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருஉருவச்சிலைக்கு ஒன்றிய செயலாளர் ராஜா (எ)ராஜேந்திரன் தலைமையில் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் ஒன்றிய நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.